**O.S. No. 88/2022**

**Date : 09.04.2026**

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)

PW 2 **திருமதி. Candy Priyadarshini**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

1. எனது அப்பா மீது தாக்கல் செய்த குற்ற வழக்கில் நானும் 2-ம் எதிரியாக உள்ளேன் என்றால் சரிதான். வா.த.சா.ஆ.6- ஒப்பந்தத்தில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். எனது அப்பா கேட்டுக் கொண்டதன் பேரில் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தை கம்பத்தில் இருந்து ஏற்படுத்திக் கொடுத்துவிட்டு சென்னையில் நான் அந்த சமயத்தில் இருந்ததாக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல.

2. உண்மையிலேயே இந்த ஒப்பந்தம் பிரதிவாதி பெயருக்கு ஏற்படுத்தப்பட்டதன் காரணமாக எனது அப்பா அந்த கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் பிரதிவாதிக்கு பத்திரம் பதிவு செய்து தர கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. எனது அப்பா தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதி இன்றளவும் கிரையம் முடிக்க தயாராக உள்ளார் என்றால் சரியல்ல.

**நீதிமன்ற கேள்வி**

2021ம் ஆண்டு எங்கள் மருத்துவமனையில் எங்களுக்கான அட்டன்டஸ் பயோ மெட்ரிக் அட்டனன்ஸ் தான் சாஃப்ட்வேர் மூலமாக பராமரிக்கப்படுகிறது. நான் விடுப்பு எடுத்திருந்தால் அது பற்றிய விவரங்கள் எனது சம்பள சான்றிதழில் அது பற்றி குறிப்பிடப்பட்டு இருக்கும். நான் Plastic and Reconstructive சர்ஜரி

துறையில் பணிபுரிந்து வருகிறேன், மீயாட் மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறேன்.

**மறு விசாரணை : இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.04.09 16:54:13 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.